மோட்டார் வாகன விபத்து கோரிக்கை உரிமை தீர்ப்பாயம்/
முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை :– திருமதி. P. சுதா, B.Com., B.L.,
மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய நடுவர்
(முதன்மை சார்பு நீதிபதி) மயிலாடுதுறை.

திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 02 ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள், திங்கள்கிழமை

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய அசல் மனு எண்.265/2019**

விவேகானந்தன், வயது 65, (இறந்துவிட்டார்),
த.பெ.தங்கவேல்,
(Amended as Per I.A.No.3/2021, dt 22.02.2022
தேதியிட்ட உத்தரவுப்படி 1 ஆம் மனுதாரர் இறந்துவிட்டதால்
அவரது வாரிசுகளான 2 முதல் 4 மனுதாரர்களை சேர்த்து
திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

1. சித்ரா, வயது 45, க.பெ.பழனியப்பன்,
2. நிர்மலா, வயது 40, க.பெ.ஜீன் எரிட்ஸ் சாண்டலம்,
3. காயத்ரி, வயது 33, க.பெ.அருண்குமார்
4. பரிமளா, வயது 28, த.பெ.விவேகானந்தன். ... மனுதாரர்கள்

**//எதிர்//**

1. மேலாண்மை இயக்குனர்,
தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம்,
சென்னை,

2. சசிகுமார் (Owner)

3. கிளை மேலாளர்,
யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி,
மயிலாடுதுறை, .... எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 18.02.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் திரு.P.அன்புரோஸ் அவர்கள் ஆஜராகியும், 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.R.சேகர் அவர்கள் ஆஜராகியும், 2 ஆம் எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், 3 ஆம்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:01:06 +0530

எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.K.ராஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் மற்றும் 1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்றைய தினம் இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

கடந்த 22.04.2019 ஆம் தேதியன்று காலை சுமார் 04.30 மணிக்கு நடந்த மோட்டார் வாகன விபத்தில் மனுதாரர் விவேகானந்தன், வயது 65, த.பெ. தங்கவேல், என்பவர் கொடுங்காயம் அடைந்து, தொடர் சிகிச்சையில் இருந்து பின் மரணமடைந்ததற்கு ரூ.10,00,000/−ம் (ரூபாய். பத்து இலட்சம் மட்டும்) மனு தாக்கலான தேதியிலிருந்து நஷ்டயீட்டுத் தொகை செலுத்தும் வரைக்கும் வட்டியுடன் சேர்த்து 1 முதல் 3 எதிர்மனுதாரர்களிடமிருந்து பெற்று தர கோரியும், செலவுத் தொகை கோரியும் அவருடைய வாரிசுதாரர்களான மனுதாரர்களால் மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02. திருத்தப்பட்ட மனுவின் சுருக்கம் :−**

**i)** கடந்த 22.04.2019 ஆம் தேதி TN 82 1957 என்ற எண்ணுள்ள காரில் காலை சுமார் 4.30 மணிக்கு புத்தூர் மெயின்ரோடு போஸ்ட் ஆபிஸ் அருகில் சென்று கொண்டிருக்கும் போது ரோட்டின் மைய பகுதியில் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 01 N 0299 என்ற எண்ணுள்ள அரசு விரைவு பேருந்தின் ஓட்டுநர் எந்த வித முன் எச்சரிக்கை பலகை வைக்காமலும், எந்த வித சமிக்கை விளக்கையும் எரிய விடாமல் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் நிறுத்தி வைத்திருந்த போது 2 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 82 1957 என்ற எண்ணுள்ள காரின் ஓட்டுநர் அரசு பேருந்தின் மீது மோதியதில் 1 ஆம் மனுதாரருக்கு BILATERAL MIDDLE CEREBELLAR PEDUNCLE CONTUSION, 2) RIGHT HIGH PAREITHAL MULTIPLE PETECHIAL CONTUSION WITH SAH, 3) RIGHT 1.5 TRANSVERSE PROCESS PRACTURE, 4) RIGHT MIDDLE FINGER PIP JOINT DISLOCATION, 6) FEW AREAS OF HEMORRHAGIC CONTUSIONS WITH EDEMA NOTED TO THE RIGHT POSTERIOR PARIETAL AND RIGHT, 7) MILD REDUCTION IN THE SUB

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:01:13 +0530

ARACHNOID HAEMORRHAGE ALONG BILATERAL PARIETAL, RIGHT FRONTAL AND OCCIPITAL AREAS, 8) இடது கை முட்டிக்கு கீழ் தோல் முற்றிலும் சேதமடைந்தும், 9) நெஞ்சு பகுதியில் ரத்த கட்டும், 10) மேல் வரிசையில் நான்கு பற்கள் முற்றிலும் உடைந்து விட்டது என்றும், விபத்து ஏற்பட்டவுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் சீர்காழி அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின்பு சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, அதன் பின்பு மேல்சிகிச்சைக்காக பாண்டிச்சேரி பீம்ஸ் மருத்துவமனையில் 22.04.2019 ஆம் தேதி உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு வலது கை நடுவிரலில் மூட்டு நழுவியதற்கு மாவு கட்டு போட்டும், மூளை பகுதியில் ரத்த கட்டு ஏற்பட்டதற்கு கண்சர்வேட்டிங் மேனேஜ்மெண்ட் என்ற முறையில் சிகிச்சை அளிக்கபட்டும், வலது பக்க தண்டு வடத்தில் L 5 என்ற எலும்பில் முறிவு ஏற்பட்டதற்கு பெல்ட் அணிவித்தும், வலது கண்ணத்தில் ஏற்பட்ட கிழிந்த காயத்திற்கு தலா 4 தையல் போட்டும் மற்ற காயங்களுக்கும் உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு 26.04.2019 ஆம் தேதி மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ii) விபத்தில் இறந்துபோன விவேகானந்தனுக்கு விபத்தின் போது வயது 65 என்றும், விவசாயம் மற்றும் காய்கறி வியாபாரம் செய்து மாதம் ரூ.15,000/- வரை சம்பாதித்து தனது குடும்பத்தை காப்பாற்றி வந்ததாகவும், விபத்தில் வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் விவசாயம் மற்றும் காய்கறி வியாபாரத்திற்கு செல்ல முடியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

iii) இந்த விபத்து சம்மந்தமாக ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலைய குற்ற எண் 80/2019 என்ற நம்பரில் இதச பிரிவுகள் 279, 337 ன் கீழ் TN 01 N 5160 என்ற எண்ணுள்ள அரசு விரைவு பேருந்து ஓட்டுனர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், விபத்துக்குள்ளான TN 01 N 5160 என்ற வாகனம் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதாகும் என்றும், இறந்துபோன விவேகானந்தன் பயணம் செய்த TN 82 1957 என்ற எண்ணுள்ள வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதாகும் என்றும், மேற்படி வாகனம் 3 ஆம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யபட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள வருமான இழப்பு நிரந்தர ஊனம், வலி, துன்பம் மற்றும்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:01:20 +0530

அன்பு, பாசம் என எல்லாவற்றிக்கும் சேர்த்து ரூபாய்.10,00,000/- 1முதல் 3 எதிர்மனுதாரர்கள் கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

**<u>03. 1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :-</u>**

1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர், போக்குவரத்து விதிகளை முழுமையாகக் கடைப்பிடித்து, உரிய கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் வாகனத்தை இயக்கியதாகவும், விபத்து நிகழ்ந்த நேரத்தில் அவர் எவ்விதத்திலும் கவனக்குறைவாகவோ, அஜாக்கிரதையாகவோ செயல்படவில்லை என்றும், மனுதாரர் விபத்து குறித்து கூறியுள்ள விபரம் தவறானது, உண்மையில் 21.04.2019 அன்று TN 01 N 5160 கொண்ட S.E.T.C. பேருந்து நாகப்பட்டினத்திலிருந்து சென்னை நோக்கி சென்றபோது அப்பேருந்தை அதன் ஓட்டுநர், அனைத்து போக்குவரத்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடித்து, மிக மெதுவாகவும், கவனத்துடனும் இயக்கிச் சென்றதாகவும், 22.04.2019 அன்று அதிகாலை சுமார் 04.00 மணியளவில், 1ஆம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான பேருந்து சீர்காழியிலிருந்து சிதம்பரம் செல்லும் சாலையில் பயணித்துக் கொண்டிருந்தபோது, புத்தூர் அஞ்சல் அலுவலகம் அருகில் சென்று கொண்டிருந்த போது அப்பேருந்தின் Wheel axle திடீரெனச் சிக்கிக் கொண்டதாகவும், உடனடியாக 1ஆம் எதிர்மனுதாரரின் பேருந்தின் ஓட்டுநர், உரிய எச்சரிக்கை சமிக்ஞைகள் மற்றும் பார்க்கிங் விளக்குகளை ஒளிரவிட்டவாறு, சாலையின் இடதுபுறத்தில் அப்பேருந்தைப் பாதுகாப்பாக நிறுத்தி வைத்திருந்ததாகவும், அந்த நேரத்தில், அதே திசையில் அதிவேகமாகவும், போக்குவரத்து விதிகளை மீறி கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வந்துகொண்டிருந்த TN 82 1957 என்ற பதிவெண் கொண்ட கார் எதிர்மனுதாரரின் பேருந்தின் பின்பக்கத்தில் பலமாக மோதியதாகவும், இவ்வாறுதான் இவ்விபத்து நிகழ்ந்தது என்றும், எனவே, முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் தரப்பில் எவ்வித கவனக்குறைவோ அல்லது அஜாக்கிரதையோ இருக்கவில்லை என்றும், விபத்தில் சிக்கிய காரை ஓட்டி வந்த சசிகுமார் என்பவர் அளித்த பொய்யான புகாரின் அடிப்படையில், ஆணைக்காரன்சத்திரம் காவல் நிலையத்தினர் முறையான விசாரணை மேற்கொள்ளாமலேயே, 1ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் மீது குற்ற எண்.80/2019 இன் கீழ், இ.த.ச.பிரிவுகள்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:01:30 +0530

279, 337 இன் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளதாகவும், எனவே, மற்ற தரப்பினரின் அலட்சியப் போக்கையும் கருத்தில் கொண்டு ஒரு முடிவுக்கு வருமாறும், காவல்துறை அதிகாரிகளால் 1 ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில், மனுதாரர் இழப்பீடு கோரி மனுவைத் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்கூறிய காவல்துறை வழக்கு, விசாரணை அதிகாரியால் (I.O.) 'உண்மைப் பிழை' (Mistake of Fact) எனக் குறிப்பிடப்பட்டு மேற்படி வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, காவல்துறை அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்ட 'உண்மைப் பிழை' அறிக்கையைக் கருத்தில் கொண்டு, அலட்சியம் என்ற அம்சத்தை நீதிமன்றம் ஆராய்ந்து, 2 ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மீது மட்டுமே அலட்சியத்தைப் பொறுப்பாக்கி, 1 ஆம் எதிர்மனுதாரருக்கு எதிரான மனுவை நிராகரிக்க வேண்டும் என்றும், மேலும் 1 ஆம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான வாகனம் பழுதாகி நின்ற உடனேயே, அதன் ஓட்டுநர் எச்சரிக்கை விளக்குகளை (indicators) ஒளிரச் செய்து, பின்னர் பயணிகளின் உதவியுடன் சாலையில் செல்லும் பிறருக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டார் என்றும், மேற்படி பேருந்து எச்சரிக்கை விளக்குகளை ஒளிரவிட்டவாறு நின்றதுடன், வாகனம் நிறுத்தப்பட்டிருப்பதை உணர்த்தும் வகையில் டார்ச் விளக்கும் எரியவிடப்பட்டிருந்தது என்றும், அதுமட்டுமின்றி, மேற்படி பேருந்து ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் புதுப்பிக்கப்பட்டு வருவதாகவும், விபத்து நிகழ்ந்ததாகக் கூறப்படும் நேரத்தில், அப்பேருந்து முழுமையான இயக்கத் தகுதியுடன் இருந்ததாகவும், விபத்து நிகழ்ந்ததாகக் கூறப்படும் நேரத்தில், 1 ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் எவ்விதத்திலும் அஜாக்கிரதையாகவோ அல்லது அலட்சியமாகவோ செயல்படவில்லை என்றும், 2 ஆம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான காரை ஓட்டி வந்த ஓட்டுநர், அதிவேகத்துடனும், அஜாக்கிரதையாகவும், அலட்சியமான முறையிலும் வாகனத்தைச் செலுத்தி 1 ஆம் எதிர்மனுதாரரின் பேருந்தின் பின்பக்கத்தில் மோதியதே விபத்திற்குக் காரணம் என்றும், TN 82 1957 என்ற பதிவு எண் கொண்ட 2 ஆம் எதிர்மனுதாரரின் காரை ஓட்டி வந்த ஓட்டுநரின் அஜாக்கிரதை, அலட்சியம் மற்றும் தவறான செயல்களே விபத்திற்குக் காரணம் என்பதற்கான மேலோட்டமான ஆதாரங்களை காவல் துறையினரும் கண்டறிந்துள்ளதாகவும், மேலும், TN 82 1957 என்ற பதிவு எண்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:01:36 +0530

கொண்ட 2ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர், முதல் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான பேருந்தின் மீது மிக வேகமாகவும், கவனக்குறைவாகவும் மோதியதன் விளைவாகவே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது என்றும், எனவே, இந்த விபத்திற்கு அந்தக் காரின் ஓட்டுநரே முழுமையாகப் பொறுப்பாவார் என்றும், அவரே இந்த விபத்தை ஏற்படுத்திய குற்றமிழைத்தவர் என்றும், எனவே, விபத்திற்குள்ளான TN 82 1957 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் உரிமையாளரான இரண்டாவது எதிர்மனுதாரரும், அந்த வாகனத்தின் காப்பீட்டாளரான மூன்றாவது எதிர்மனுதாரரும் இணைந்து, மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க பொறுப்பாவார்கள் என்றும், மேலும், 'National Insurance Company Ltd எதிர் Swarant Singh' (LJR 826 SC) வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி, "விபத்து நிகழ்வதில் பாதிக்கப்பட்டவரின் தரப்பிலேயே கவனக்குறைவு இருந்தபோதிலும், காப்பீட்டு நிறுவனம் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கக் கடமைப்பட்டுள்ளது" என்று தீர்ப்பளிக்கப்பட்டு உள்ளது, அந்த அடிப்படையில் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், இம்மனுவில், முதல் எதிர்மனுதாரரைச் சேர்த்திருப்பது முறையற்றது என்றும், எனவே, விபத்திற்குள்ளான வாகனத்தின் உரிமையாளரான இரண்டாவது எதிர்மனுதாரரும், TN 82 1957 பதிவு எண் கொண்ட அந்தக் காரின் காப்பீட்டாளரான மூன்றாவது எதிர் மனுதாரரும் மட்டுமே இந்த இழப்பீட்டு மனுவிற்குத் தேவையான தரப்பினர்களாவர், எனவே, முதல் எதிர்மனுதாரருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**04. 3ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :-**

இந்த விபத்து, முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனர் கென்னடி என்பவரின் கவனக்குறைவின் காரணமாக மட்டுமே நிகழ்ந்துள்ளது, பேருந்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறின் காரணமாக, ஓட்டுநர் எவ்வித முன்னெச்சரிக்கை சைகையையும் காட்டாமலேயே, சாலையின் நடுவே பேருந்தை நிறுத்தியிருந்ததாகவும், இது முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுநரால் செய்யப்பட்ட முற்றிலும் கவனக்குறைவான செயலே என்றும், முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் சாலையின் நடுவே பேருந்தை நிறுத்தியதே விபத்து ஏற்படக் காரணமாக அமைந்தது என்றும், எனவே, விபத்திற்கு

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:01:45 +0530

முழுமையான பொறுப்பு முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரையே சாரும் என்றும், இதன் அடிப்படையில் இரண்டாம் எதிர்மனுதாரர் ஆணைக்காரன்சத்திரம் காவல் ஆய்வாளரிடம் முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு எதிராகப் புகார் அளித்துள்ளதாகவும், அப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், எனவே, மொத்த அலட்சியமும் 1 ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் தரப்பில் மட்டுமே உள்ளது என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் மட்டுமே மனுதாரருக்கு இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்றும், மேற்கண்ட வாதங்களுக்கு எந்தவித பாரபட்சமும் இல்லாமல், விபத்து நடந்த நேரத்தில் TN 82 1957 என்ற பதிவு எண் கொண்ட டவேரா கார் 3 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும், 2 ஆம் எதிர்மனுதாரருக்கு அதை ஓட்டுவதற்கு செல்லுபடியாகும் உரிமம் இருந்தது என்பதையும் நிரூபிக்க மனுதாரர் கடமைப்பட்டுள்ளதாகவும், மனுதாரரின் வயது மற்றும் வருமானமும் தவறாகக் கூறப்பட்டுள்ளது, வயது மற்றும் வருமானத்தை உறுதிப்படுத்த மனுதாரர்கள் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை, உண்மையில் மனுதாரருக்கு எந்தவொரு குறிப்பிடத்தக்க காயமும் ஏற்படவில்லை, இதனால் எந்தவொரு ஊனமும் ஏற்படவில்லை, குறிப்பாக M.V. சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள படி நிரந்தர இயலாமை ஏற்படவில்லை, மனுதாரர் சம்பாதிக்கும் உறுப்பினராகவோ அல்லது அவருக்கு எந்த வருமான இழப்போ இல்லை, ரூ.10,00,000/– இழப்பீடு கோரியுள்ளது மனுதாரருக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் இழப்புக்கு விகிதாசாரமாக இல்லை, மனுதாரருக்கு மனுவில் கூறப்பட்டுள்ள விகிதத்தில் வட்டி கோர உரிமை இல்லை, மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள், சிகிச்சையின் தன்மை, சிகிச்சை காலம் மற்றும் மருத்துவச் செலவுகள் பற்றி மனுவில் குறிப்பிடவில்லை, அவர் எந்தத் தொகையையும் கோர உரிமை இல்லை, எனவே, 3 ஆம் எதிர்மனுதாரருக்கு எதிரான மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 05. இந்த மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனைகள் :–

1. இந்த விபத்து யாருடைய கவனக்குறைவின் காரணமாக ஏற்பட்டது?
2. மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் யார்?
3. மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?
4. மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரம் என்ன?

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:01:51 +0530

**06.** 2 ஆம் எதிர்மனுதாரர் அழைப்பாணையை பெற்றுக்கொண்டும் இந்நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினர் நிலையில் வைக்கப்பட்டுள்ளார்.

**07.** இம்மனு விசாரணையின் போது மனுதாரர் தரப்பில் ம.சா.1 முதல் ம.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, குறியீடு செய்யப்பட்டு உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 3 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் கிளை மேலாளர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. 1 ஆம் மனுதாரரின் ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மற்றும் 1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>08. பிரச்சனை எண்.1 :–</u>**

i) மனுதாரர்கள் தரப்பில் 3 ஆம் மனுதாரர் காயத்ரி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.1 மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை ஒத்துரைத்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து, முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளார். 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது விபத்து ஏற்பட்டவுடன் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று முதல் உதவி சிகிச்சை பெற்ற உடனே சிதம்பரம் மருத்துவமனைக்கும், அங்கிருந்து பாண்டிச்சேரி பீம்ஸ் மருத்துவமனைக்கும் அழைத்துச் செல்லபட்டார் என்றும், நின்று கொண்டிருந்த அரசு பேருந்தில் தான் அவரது தந்தை பயணம் செய்த வாகனம் மோதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், இந்த வழக்கில் 8 பேருக்கு அடிபட்டது என்றும், விபத்து ஏற்பட்டு 1 வருடத்திற்கு மேல் தான் 2020 ல் தான் அவரது அப்பா இறந்தார் என்றும், 3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் விபத்து நடந்து 18 மாதங்கள் கழித்து தான் அவரது அப்பா இறந்தார் என்றால் சரிதான் என்றும், அவரது அப்பா உயிருடன் இருக்கும்போது நஷ்டயீடு கோரி இம்மனுவை தாக்கல் செய்தார் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:01:58 +0530

ii) ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட செல்வநாதன் அவரது சாட்சியத்தில் கடந்த 22.04.2019 ஆம் தேதி TN 82 1957 என்ற எண்ணுள்ள காரில் ம.சா.2 ம், விபத்தில் இறந்துபோன விவேகானந்தனும் விஷேத்தில் கலந்து கொள்வதற்காக சென்று கொண்டிருந்ததாகவும், ம.சா.2 பயணம் செய்த கார் காலை சுமார் 4.30 மணிக்கு புத்தூர் மெயின்ரோடு போஸ்ட் ஆபிஸ் அருகில் சென்று கொண்டிருக்கும் போது ரோட்டில் TN 01 N 0299 என்ற பேருந்து நின்று கொண்டிருந்த போது ம.சா.2 பயணம் செய்த காரின் ஓட்டுனர் பேருந்தின் பின்பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது என்றும், இவ்விபத்தில் விவேகானந்தனுக்கு முதுகு தண்டுவடம், கை, கால் ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டது, அவர் வெவ்வேறு மருத்துவமனைகளில் தொடர் சிகிச்சையிலிருந்து சிகிச்சை பலனளிக்காமல் 21.10.2020 ஆம் தேதி இறந்துவிட்டார் என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் ம.சா.2 சென்ற வாகனம் ரோட்டின் ஓராமாக நின்று கொண்டிருந்த அரசு வாகனத்தின் மீது மோதி சென்று விட்டதாகவும், ம.சா.2 பயணித்த வாகனத்தில் இருந்த 7 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும், ***விபத்திற்கு பிறகு 18 மாதம் கழித்து விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் தான் இறந்தார் என்றும், 3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் விபத்து சமயத்தில் ம.சா.2 டிரைவர் சீட் பக்கத்தில் அமர்ந்து இருந்தார் என்றும், அவர்கள் சென்ற வாகனத்திற்கு முன்பு தான் அரசு போக்குவரத்து கழக பேருந்து பழுதாகி, ரோட்டின் நடுவே நின்று கொண்டிருந்தது என்றும், நின்று கொண்டிருந்த வாகனத்தில் சமிக்கையோ, தடுப்புகளோ இல்லை என்றும், இறந்தவருக்கு மூளையில் ஏறபட்ட இரத்த கசிவாலும், DL1, D5 ஆகிய இடுப்பு எலும்புகளில் ஏற்பட்ட எலும்பு முறிவினாலும் தான் அவருக்கு இறப்பு ஏற்பட்டது*** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

iii) ம.சா.3 ஆக பாண்டிச்சேரி பீம்ஸ் (PIMS) மருத்துவமனை மருத்துவர் சீனிவாசன் விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில் ***மனுதாரர் விவேகானந்தன் கடந்த 22.04.2019 அன்று சாலை விபத்தில் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்தவரை அப்போது பணியில் இருந்த மருத்துவர் பரிசோதனை செய்ததில் அவருக்கு மூளையின் இருபகுதியிலும் Cerebillar என்ற பகுதியில் இரத்தக்கசிவும், மூளையின் வலது பக்கத்தில் Parietal பகுதியில் இரத்தக்கசிவும், முதுகின் தண்டு வடத்தில் வலது பகுதியில் L-5 என்ற எலும்பில் எலும்பு முறிவும்,***

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:02:05 +0530

***வலது பக்க நடுவிரலில் மூட்டு நழுவியும் இருந்ததாக குறிப்பிடபட்டிருந்தது***, அவரை மேலும் பரிசோதனை செய்ததில் G.C.S. 12/15 என்ற அளவில் இருந்தது, அவருக்கு Conservative Management என்ற முறையில் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது, அவருக்கு வலது பக்க நடுவிரலில் ஏற்பட்ட எலும்பு முறிவுக்கு மாவுக்கட்டு போட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது, அவர் 26.04.2019 அன்று மருத்துவ மனையிலிருந்து விடுவிக்கப்பட்டார், ***மனுதாரர் தலை மற்றும் தண்டுவடத்தில் ஏற்பட்ட காயங்களினால் படுத்தப்படுக்கையாக இருந்திருக்கலாம், இதுபோல் காயங்கள் ஏற்பட்டு அவர் இறப்பதற்கான வாய்ப்பு உண்டா என்றால் உண்டு*** என்றும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் விவேகானந்தன் ம.சா.3 பணிபுரியும் PIMS மருத்துவ மனையில் சிகிச்சை எடுத்துக் கொண்ட காலத்தில் ம.சா.3 பணியில் இல்லை என்றும், அவருக்கு நரம்பியல் அறுவை சிகிச்சைத் துறையில் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும், மருத்துவ ஆவணங்களின் அடிப்படையிலும், Discharge Summary, அவர் தொடர்பான கோப்புகளை வைத்து சாட்சியம் அளிப்பதாகவும், மருத்துவமனையிலிருந்து 26.04.2019 ல் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும், **மனுதாரர் தலை மற்றும் தண்டுவடத்தில் ஏற்பட்ட காயங்களினால் அவர் படுத்தப்படுக்கையாக இருந்திருக்கலாம் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளது மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் அவருக்கு மூளையில் ஏற்பட்ட காயங்கள் அவரால் எழுந்திருக்க இயலாத வகையிலும் அவர் படுத்த படுக்கையாகத்தான் இருப்பதற்கு வாய்ப்பு உண்டு என்பதாலும் சாட்சியம் அளித்துள்ளதாகவும்,** 22.04.2019 முதல் 26.04.2019 வரை அவர் சிகிச்சையில் இருந்தபோது இருந்த கோப்பின் அடிப்படையில் தான் சாட்சியம் அளித்துள்ளதாகவும், விவேகானந்தனுக்கு ஏற்பட்ட இரத்தக்கசிவு அவரை ***டிஸ்சார்ஜ் செய்த நேரத்தில் இரத்தக்கசிவு இருந்ததா என்றால் CT Scan மறுபடியும் எடுத்து பார்த்ததில் அதில் மூளையில் உள்ள இரத்தஉறைவு அதிகரிக்கவில்லை*** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது நரம்பியலுக்கு மட்டும் நிலையாக உள்ளதாக டிஸ்சார் சம்மரியில் கூறுப்பட்டுள்ளது. ***எலும்பு முறிவை பொருத்து மருந்து மாத்திரைகள் மற்றும் Bed Rest ஆக இருந்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது*** என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் என்னால் மருத்துவம் சார்ந்த கேள்விகளுக்கு கோப்புகளில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் பதில் அளிக்க இயலும் என்று சாட்சியம்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:02:12 +0530

அளித்துள்ளார். **<u>நீதிமன்ற கேள்வியில்</u>** GCS அளவிற்கான அட்டவணை உள்ளதா? அந்த அளவீடு என்ன பயன்பாட்டிற்காக பார்க்கப்படுகிறது? என்று கேட்கப்பட்டபோது அட்டவணை உள்ளது என்றும், அந்த GCS ஒரு அடிப்பட்ட நபரின் நரம்பியல் சம்பந்தமான நிலை எப்படி உள்ளது என்பதை கணிப்பதற்காக இந்த GCS எடுக்கப்படுகிறது, எடுக்கப்பட்ட GCS ன் அடிப்படையில் சிகிச்சை மேற்கொள்ளமுடியுமா என்றால் ஒரு நபர் சிகிச்சையின் பொழுது அந்த நேரத்தில் அவரால் சுவாசிப்பதற்கு கடினமாக இருக்கிறதா என்பதை கண்டயறிவும், அவரது நரம்பியல் தொடர்பான செயல்பாடுகள் எப்படி உள்ளது என்பதை பரிசோதனை செய்வதற்காகவும் இந்த GCS ன் அளவைப்பொருத்து அந்த நேரத்தில் அவருக்கு ஏற்பட்டுள்ள நரம்பியல் தொடர்பான சிகிச்சைக்கு இது உதவியாக இருக்கும் என்றும், அதன் அடிப்படையில் மேற்படி விவேகானந்தனுக்கு GCS எடுக்கப்பட்டது, என்னிடம் GCS அட்டவணைப்படி GCS 12/15 க்கு என்ன குறிப்பிடப்பட்டு இருக்கும் என்றால் Mild to Moderate என்று இருக்கும், என்னிடம் உள்ள கோப்பில் சிகிச்சை அளிக்கப்பட்டவருக்கான டிஸ்சார்ஜ் சம்மரியில் அவருக்கான GCS 12/15 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iv) எ.ம.சா.1 ஆக 3 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் கிளை மேலாளர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் SETC ஓட்டுனர் பெயரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது, SETC ஓட்டுனரின் அஜாக்கிரதையால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் நின்று கொண்டிருந்த பேருந்தின் மீது மனுதாரர் பயணம் செய்த வாகனம் மோதிவிபத்து ஏற்பட்டது என்றால் சரிதான் என்றும், அந்த விபத்தில் 7 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான் என்றும், மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் மனுதாரர் ***<u>விவேகானந்தன் எ.ம.சா.1 ன் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தில் தான் பயணம் செய்தார் என்றார் சரிதான் என்றும், விபத்துக்குள்ளான வாகனம் விபத்து சமயத்தில் காப்பீடு மற்றும் ஓட்டுனர் உரிமம் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்</u>*** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

v) மேற்படி ம.சா.1 முதல் ம.சா.3 சாட்சிகளின் சாட்சியத்தையும், மனுதாரர்கள் தரப்பில் முன்னிடப்பட்ட வாதுரைகளையும், சான்றாவணங்களையும் பரிசீலித்து

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:02:19 +0530

பார்க்கும்போது கடந்த 22.04.2019 ஆம் தேதி TN 82 1957 என்ற எண்ணுள்ள காரில் காலை சுமார் 4.30 மணிக்கு புத்தூர் மெயின்ரோடு போஸ்ட் ஆபிஸ் அருகில் சென்று கொண்டிருக்கும் போது ரோட்டின் மைய பகுதியில் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 01 N 0299 என்ற எண்ணுள்ள அரசு விரைவு பேருந்தின் ஓட்டுநர் எந்த வித முன் எச்சரிக்கை பலகை வைக்காமலும், எந்த வித சமிக்கை விளக்கையும் எரிய விடாமல் அஜாக்கரதையாகவும், கவனக்குறைவாகவும் நிறுத்தி வைத்திருந்த போது 2 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 82 1957 என்ற எண்ணுள்ள காரின் ஓட்டுநர் அரசு பேருந்தின் மீது மோதியதில் 1 ஆம் மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு, அந்த விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் காரணமாகத்தான் 1 ஆம் மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேலும் 1 ஆம் மனுதாரர் சிகிச்சை பெற்ற பாண்டிச்சேரி பீம்ஸ் மருத்துவமனை மருத்துவரும் அவரது சாட்சியத்தில் மனுதாரர் தலை மற்றும் தண்டுவடத்தில் ஏற்பட்ட காயங்களினால் அவர் படுத்தப்படுக்கையாக இருந்திருக்கலாம் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளது மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் அவருக்கு மூளையில் ஏற்பட்ட காயங்களால் அவரால் எழுந்திருக்க இயலாத வகையிலும் அவர் படுத்த படுக்கையாகத்தான் இருப்பதற்கு வாய்ப்பு உண்டு என்று சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், ***1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் ம.சா.2 சென்ற வாகனம் ரோட்டின் ஓரமாக நின்று கொண்டிருந்த அரசு வாகனத்தின் மீது மோதிசென்றுவிட்டதாகவும், ம.சா.2 பயணித்த வாகனத்தில் இருந்த 7 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும், விபத்திற்கு பிறகு 18 மாதம் கழித்து விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் தான் இறந்தார் என்றும், 3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் விபத்து சமயத்தில் ம.சா.2 டிரைவர் சீட் பக்கத்தில் அமர்ந்து இருந்தார் என்றும், அவர்கள் சென்ற வாகனத்திற்கு முன்பு தான் அரசு போக்குவரத்து கழக பேருந்து பழுதாகி, ரோட்டின் நடுவே நின்று கொண்டிருந்தது என்றும், நின்று கொண்டிருந்த வாகனத்தில் சமிக்கையோ, தடுப்புகளோ இல்லை என்றும், இறந்தவருக்கு மூளையில் ஏறபட்ட இரத்த கசிவாலும், DL1, D5 ஆகிய இடுப்பு எலும்புகளில் ஏற்பட்ட எலும்பு முறிவினாலும் தான் அவருக்கு இறப்பு ஏற்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளதிலிருந்தும், மேற்படி விபத்திற்கு முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 01 N 0299 என்ற அரசு***

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:02:25 +0530

***பேருந்தின் ஓட்டுனரும், 2 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 82 1957 என்ற காரின் ஓட்டுனரும் தான் காரணம் என்பது தெளிவாக தெரியவருகிறது*** என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

vi) முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 01 N 0299 என்ற எண்ணுள்ள அரசு விரைவு பேருந்தின் ஓட்டுநர் எந்த வித முன் எச்சரிக்கை பலகை வைக்காமலும், எந்த வித சமிக்கை விளக்கையும் எரிய விடாமல் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் நிறுத்தி வைத்திருந்த போது 2 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 82 1957 என்ற எண்ணுள்ள காரின் ஓட்டுநர் அரசு பேருந்தின் மீது மோதியதால் தான் 1 ஆம் மனுதாரருக்கு இவ்விபத்து ஏற்பட்டு, மேற்படி விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் தான் அவருக்கு இறப்பு ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிய வருகிறது, எனவே ***இவ்வழக்கு விபத்திற்கு முதல் எதிர்மனுதாரரான பேருந்தின் ஓட்டுனரும், 2 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான காரின் ஓட்டுனரும் இருவரும் சேர்ந்து தான் காரணம் என்று பிரச்சனை எண் 1 ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.***

**09. பிரச்சனை எண்.2 :-**

i) இவ்வழக்கு விபத்திற்கு முதல் எதிர்மனுதாரரான பேருந்தின் ஓட்டுனரும், 2 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான காரின் ஓட்டுனரும் இருவரும் சேர்ந்து தான் காரணம் என்று தீர்வு காணப்பட்டுள்ளது.

ii) இவ்வழக்கு விபத்திற்கு முதல் எதிர்மனுதாரரான TN 01 N 0299 என்ற பதிவெண் கொண்ட தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழக பேருந்து ஓட்டுனரும் காரணம் என்பது தெரிய வருவதாலும், மேற்படி முதல் எதிர்மனுதாரர் வாகனம் அரசு போக்குவரத்து கழகத்திற்கு பாத்தியப்பட்டது என்பதாலும் அந்த வாகனத்திற்கு காப்பீடு செய்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதாலும் முதல் எதிர்மனுதாரரான தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழகம் இழப்பீட்டுத் தொகையில் சரிபாதி தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

iii) மேலும், 2 ஆம் எதிர்மனுதாரரான TN 82 1957 என்ற பதிவெண் கொண்ட கார் விபத்து காலத்தில் 3 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டு,

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:02:32 +0530

அக்காப்பீடு நிலுவையிலிருந்துள்ளது என்பதை நிரூபிக்க காப்பீட்டின் நகல் ம.சா.ஆ.3 ஆக மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.3 யை ஆய்வு செய்யும்போது 2 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 82 1957 என்ற பதிவெண் கொண்ட வாகனத்திற்கு 12.04.2019 முதல் 11.04.2019 வரை இன்சூரன்ஸ் நிலுவையில் இருந்துள்ளது என்பதும் இக்கால இடைவெளியில் தான் அதாவது 22.04.2019 ஆம் தேதி தான் 1 ஆம் மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டுள்ளது என்பதும் தெளிவாக தெரியவருகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.4 ஆவணத்தின் படி 2 ஆம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் செல்லத்தக்க ஓட்டுனர் உரிமம் உள்ளது என்பது புலனாகிறது.

iv) எனவே, முதல் எதிர்மனுதாரர் சட்ட விதிமுறைகளின் படியும், அவ்வாகனத்திற்கு தேவையான அனைத்து விதிமுறைகளை பின்பற்றியும் தான் வாகனத்தினை இயக்கியுள்ளார் என்பது தெளிவாக தெரியவருகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

v) எனவே, இவ்வழக்கு விபத்திற்கு முதல் எதிர்மனுதாரரான பேருந்தின் ஓட்டுனரும், 2 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான காரின் ஓட்டுனரும் இருவரும் சேர்ந்து தான் காரணம் என்று தீர்வு காணப்பட்டுள்ளதால், முதல் எதிர்மனுதாரர் வாகனம் அரசு போக்குவரத்து கழகத்திற்கு பாத்தியப்பட்டது என்பதாலும் அந்த வாகனத்திற்கு காப்பீடு செய்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதாலும் ***முதல் எதிர்மனுதாரரான தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழகமும், 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் பாலிசி விதிமீறல் இல்லை என்ற நிலையில் 2 ஆம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனமும் சேர்ந்து தான் மனுதாரர்களுக்கான உரிய இழப்பீட்டுத் தொகையினை கொடுக்க கடமைப்பட்டவர்கள்*** என்று பிரச்சனை எண்.2 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>10. பிரச்சனை எண்.3 :–</u>

i) இம்மனுவில் கண்ட 1 முதல் 4 மனுதாரர்கள் இறந்துவிட்ட விவேகானந்தன் என்பவரின் சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்பதை நிரூபணம் செய்வதற்கு

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:02:38 +0530

மனுதாரர்கள் தரப்பில் இறந்துபோன விவேகானந்தன் என்பவரின் வாரிசுசான்றிதழ் ம.சா.ஆ.12 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 முதல் 4 மனுதாரர்கள் விபத்தில் இறந்துபோன விவேகானந்தன் என்பவரின் மகள்கள் என்பதும் தெளிவாக தெரியவருகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

ii) ம.சா.1 தனது சாட்சியத்திலும், அவரது பிரமாண வாக்குமூலத்திலும் தனது தகப்பனார் விபத்து சமயத்தில் ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் 65 வயது நிரம்பியவராக விவசாயம் மற்றும் காய்கறி வியாபாரம் செய்து மாதம் ரூ.15,000/- வரை சம்பாதித்து தனது குடும்பத்தை காப்பாற்றி வந்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், நாளது தேதி வரையிலும் மனுதாரர்களின் தகப்பானரின் வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை காண்பிக்க எவ்வித ஆவணங்களும் முன்னிருத்தப்படவில்லை. ம.சா.1 தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் விபத்து சமயத்தில் தனது அப்பாவிற்கு 75 வயது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் ம.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும்போது விபத்து சமயத்தில் இறந்துபோன நபருக்கு 75 வயது என்பது தெரியவருகிறது. இறந்துபோன நபரின் வயது, விலைவாசி ஏற்றம், தற்போதைய பொருளாதார நிலை, தினசரி வாழ்க்கை முறை ஆகியவற்றை கருத்தில்கொண்டு பார்க்கும்பொழுது அவரது உத்தேச மாத வருமானம் ரூ.8,000/- என்று நிர்ணயம் செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இத்தீர்ப்பாயம் கருதுகிறது.

**11. National Insurance company Limited Vs Pranay Sethi, Dated:31.10.2017** என்ற முன்னோடி தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும்போது இறந்துபோன நபர்களின் இழப்பீட்டை கணக்கீடு செய்கையில் Multiplier யை பொருத்தமட்டும் சரளாவர்மா என்ற முன்னோடி தீர்ப்பின் 42 ஆம் பத்தியில் கண்டுள்ள வழிமுறைகளை பின்பற்ற வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. மேற்படி சரளாவர்மா என்ற முன்னோடி தீர்ப்பின் 42 ஆம் பத்தியில் 60 முதல் 70 வயதுக்குட்பட்ட நபர்களுக்கு இறுதியாக Multiplier 5 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இம்மனுவில் இறந்துபோன நபரின் வயது 75 என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 70 வயதிற்கு மேற்பட்ட நபர்களுக்கான Multiplier ஆனது குறிப்பிட்டு சொல்லப்படாதபட்சத்திலும், ரேஷ்மாகுமாரி என்ற முன்னோடி தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் அடிப்படையில்

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.03.16 19:02:44 +0530

இவ்வழக்கை பொருத்தமட்டும் **<u>75 வயதுள்ள நபருக்கு Multiplier ஆக 5 எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்படுகிறது.</u>**

**12. National Insurance company Limited Vs Pranay Sethi, Dated:31.10.2017,** என்ற முன்னோடி வழக்கில் சொல்லப்பட்டுள்ளபடி 60 வயதுக்கு உட்பட்ட நபர்களுக்கு மட்டுமே எதிர்கால வருமானத்தை கருத்தில்கொள்ள முடியும். இவ்வழக்கில் இறந்துபோன விவேகானந்தன் என்பவருக்கு 75 வயது என்று இந்த தீர்ப்பாயத்தால் முடிவு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் **<u>அவருக்கு எதிர்கால வருமானம் பொருந்தாது என்று முடிவு செய்யப்படுகிறது.</u>** அவ்வகையில் இவ்விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்பீடு ரூ.8,000/- X 12 X 5 = ரூ.4,80,000/- ஆகும்.

**13. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் 2009(2) TN MAC 1 (SC)-Smt. Sarla Verma & Ors./Vs/ Delhi Transport Corporation & Anr.** என்ற வழக்கில் ஒரு இறந்த நபர் தனது சுயதேவைக்காக 5-ல் 1-பாகம் செலவழித்திருப்பார். எனவே ரூ.4,80,000/- ÷ 5 = ரூ.96,000/- போக மீதமுள்ள 4/5 பாகமான ரூ.3,84,000/-இந்தத் தொகை வருமான இழப்புக்கான இழப்பீடாக மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதாகிறது.

**14.** மேலும், மேற்படி முன்னோடி தீர்ப்பில் கண்டுள்ளபடி Loss of Estate ற்காக ரூ.15,000/-, Loss of Consortium (பாச இழப்பிற்காக) ரூ.40,000/-, மற்றும் Funeral Expanses ற்காக ரூ.15,000/-, ஆக மொத்தம் ரூ.70,000/- மனுதாரர்களுக்கு மேற்படி தலைப்புகளின் கீழ் கிடைக்கக்கூடியது. ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கும் மேற்படி தீர்ப்புரையை பொருத்து 10 சதவிகிதம் தொகை அதிகப்படுத்திகொடுக்க வேண்டும். இந்நிலையில் மேற்படி தொகையை பொருத்து 10 சதவிகிதம் அதிகமாக அதாவது ரூ.7,000/- கூடுதலாக, **<u>ஆகமொத்தம் ரூ.77,000/- மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடியது என்றும் முடிவு செய்யப்படுகிறது.</u>**

**15.** விபத்தில் இறந்துபோன விவேகானந்தன் என்பவர் விபத்து ஏற்பட்டவுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் சீர்காழி அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின்பு சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு, அதன் பின்பு மேல்சிகிச்சைக்காக பாண்டிச்சேரி பீம்ஸ்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:02:51 +0530

மருத்துவமனையில் 22.04.2019 ஆம் தேதி உள்நோயாளியாக அனுமதிக்கபட்டு வலது கை நடுவிரலில் மூட்டு நழுவியதற்கு மாவு கட்டு போட்டும், மூளை பகுதியில் ரத்த கட்டு ஏற்பட்டதற்கு கண்சர்வேட்டிங் மேனேஜ்மெண்ட் என்ற முறையில் சிகிச்சை அளிக்கபட்டும், வலது பக்க தண்டு வடத்தில் L 5 என்ற எலும்பில் முறிவு ஏற்பட்டதற்கு பெல்ட் அணிவித்தும், வலது கண்ணத்தில் ஏற்பட்ட கிழிந்த காயத்திற்கு தலா 4 தையல் போட்டும் மற்ற காயங்களுக்கும் உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு 26.04.2019 ஆம் தேதி மருத்துவமனையிலிருந்து விடுவிக்கபட்டுள்ளார் என்பதற்கு ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.8 டிஸ்சார்ஜ் சம்மரிகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.8 ஆவணங்களின் படி மனுதாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டு, சிகிச்சை பெற்று, அதன்பின்னர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார் என்பது தெரியவருவதால் மனுதாரர் சிகிச்சையில் இருந்தபோது மருந்துகள் உட்கொண்ட வகைக்கு ம.சா.ஆ.7 ஆக ரூ.44,477/- ற்கு மருத்துவ பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே **ம.சா.ஆ.7 ஆவணத்தின் அடிப்படையில்** ரூ.**44,477/- இந்த தொகை மருத்துவ செலவிற்காக மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது** என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**16. கீழ்கண்ட பட்டியலின் கீழ் இழப்பீட்டுத்தொகை கணக்கிடப்படுகிறது.**

| **வ. எண்.** | **தலைப்பு** | **இழப்பீட்டுத் தொகை** |
|---|---|---|
| **1.** | வருமான இழப்பு<br>(Loss of Dependency)<br>ரூ.8,000/- X 12 X 5 = ரூ.4,80,000/-<br>ரூ.4,80,000/- ÷ 1/5 = ரூ.96,000/- போக மீதமுள்ள 4/5 பாகம் ரூ.3,84,000/- | ரூ.3,84,000/- |
| 2. | வசதி வாய்ப்பு இழந்தமைக்காக<br>(Loss of Estate )<br>Rs.15,000/- + Rs.1,500 (10% in Rs.15,000/-) = Rs.16,500/- | ரூ.16,500/- |
| 3. | மனுதாரர்களுக்கு ஏற்பட்ட தாயின் பாச இழப்பிற்காக<br>(Loss of Parental Consortium)<br>Rs.40,000/- + Rs.4,000 (10% in Rs.40,000/-) = Rs.44,000/-<br>Rs.44,000/- X 4 = Rs.1,76,000/- | ரூ.1,76,000/- |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:02:56 +0530

| | | |
|---|---|---|
| 4. | ஈமக்கிரியை செலவிற்காக (Funeral Expanses) Rs.15,000/- + Rs.1,500 (10% in Rs.15,000/-) = Rs.16,500/- | ரூ.16,500/- |
| 5. | மருத்துவசெலவு (Medical Bills) | ரூ.44,477/- |
| | **மொத்தம்** | **ரூ.6,37,477/-** |

ஆக மொத்தம் 1 முதல் 4 மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீட்டுத் தொகையாக **ரூ.6,37,477/- (ரூபாய்.ஆறு லட்சத்து முப்பத்து ஏழாயிரத்து நானூற்று எழுபத்து ஏழு மட்டும்)** கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்யப்படுகிறது.

| **மனுதாரர்கள்** | **இறந்த நபரின் உறவு முறை** | **இழப்பீட்டுத் தொகை** |
|---|---|---|
| 1-ம் மனுதாரர் | மகள் 20% | ரூ.1,27,495/- |
| 2-ம் மனுதாரர் | மகள் 20% | ரூ.1,27,495/- |
| 3-ம் மனுதாரர் | மகள் 20% | ரூ.1,27,495/- |
| 4-ம் மனுதாரர் | திருமணம் ஆகாதவர் மகள் 40% | ரூ.2,54,992/- |
| | **மொத்தம்** | **ரூ.6,37,477/-** |

**<u>17. பிரச்சனை எண்.4 :-</u>**

மனுவின் செலவுத்தொகை மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் வேறு பரிகாரம் எதுவும் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் பிரச்சனை எண்.4-க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**18.** i) முடிவில், இம்மனு பகுதியாக மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு ***முதல் எதிர்மனுதாரரான தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழகமும், 3 ஆம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனமும் சேர்ந்து*** மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீட்டு தொகையான **ரூ.6,37,477/- ல் (ரூபாய்.ஆறு லட்சத்து முப்பத்து ஏழாயிரத்து நானூற்று எழுபத்து ஏழு மட்டும்)** ***தலா ரூ.3,18,738.50/-யை கொடுக்க வேண்டும்மென்று உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகையில் 1 முதல் 3***

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:03:03 +0530

***மனுதாரர்களுக்கு தலா ரூ.1,27,495/-வீதமும், திருமணம் ஆகாத 4 ஆம் மனுதாரருக்கு ரூ.2,54,992/-ம் கிடைக்கத்தக்கது என்று உத்தரவிடப்படுகிறது.***

ii) மேற்படி இழப்பீட்டு தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை மனுதாரர்களின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் காலம் தவிர 7.5 % சதவிகிதம் ஆண்டு வட்டி சேர்த்து இந்த உத்தரவு தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

iii) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 1 மற்றும் 3 ஆம் எதிர்மனுதாரர்கள் மயிலாடுதுறை பாரத மாநில வங்கி கிளையில் உள்ள இந்த மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய கணக்கு எண்.42800964666-ல் செலுத்த வேண்டும் என்றும், செலுத்திய விபரத்தை இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்/உரிமைகோருபவர் மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயத்திலிருந்து NEFT or RTGS மூலம் வட்டியுடன் சேர்ந்த அவர்களது முழு இழப்பீட்டுத் தொகையை வங்கியில் திரும்பப்பெற அனுமதிக்கப்படுகிறார்கள்.

v) பாக்கி நீதிமன்றக் கட்டணமான ரூ.5372/-யை 1 முதல் 4 மனுதாரர்கள் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

வழக்குரைஞர் கட்டணம் ரூ.22,250/- என நிர்ணயம் செய்யப்படுகிறது.

இவ்வுத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:03:10 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

***Particulars provided as per the Judgment of Hon'ble Madras High Court in M/S Cholamandalam MS Genl Ins.Co.Ltd., – Vs– Mr.Ayyanar, Tr.C.M.P.No.264 to 2020, dated 11.05.2020 என்ற உத்தரவுப்படி தீர்ப்பாணை தனியாக பிறப்பிக்கப்படவில்லை.***

**மனு எண்.265/2019**

| | | |
|---|---|---|
| 1. | (Name and Address of the Claimant)<br>(மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்) | விவேகானந்தன், வயது 65, (இறந்துவிட்டார்), த.பெ.தங்கவேல், நெ.407 செட்டித்தெரு, சேந்தங்குடி , சேந்தங்குடி அஞ்சல், மயிலாடுதுறை தாலுக்கா.<br>(Amended as Per I.A.No.3/2021, dt 22.02.2022 தேதியிட்ட உத்தரவுப்படி 1ஆம் மனுதாரர் இறந்து விட்டதால் அவரது வாரிசுகளான 2 முதல் 4 மனுதாரர்களை சேர்த்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது)<br><br>1. சித்ரா, வயது 45, க.பெ.பழனியப்பன், நெ.4/23, விஜயராகவபுரம், 3 வது தெரு, சாலிகிராமம், சென்னை மாநகராட்சி.<br><br>2. நிர்மலா, வயது 40, க.பெ.ஜீன் எரிட்ஸ் சாண்டலம், நெ.407 செட்டித்தெரு, சேந்தங்குடி , சேந்தங்குடி அஞ்சல், மயிலாடுதுறை தாலுக்கா.<br><br>3. காயத்ரி, வயது 33, க.பெ.அருண்குமார், நெ.407 செட்டித்தெரு, சேந்தங்குடி , சேந்தங்குடி அஞ்சல், மயிலாடுதுறை தாலுக்கா.<br><br>4. பரிமளா, வயது 28, த.பெ.விவேகானந்தன், நெ.407 செட்டித்தெரு, சேந்தங்குடி , சேந்தங்குடி அஞ்சல், மயிலாடுதுறை தாலுக்கா. |
| 2. | Name and Address of the Respondents<br>(எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்) | 1. மேலாண்மை இயக்குனர், தமிழ்நாடு அரசு விரைவுபோக்குவரத்துக் கழகம், நெ.2 பல்லவன் சாலை, சென்னை மாநகராட்சி மற்றும் டவுன்<br><br>2.சசிகுமார்(Owner)வயது 45, த.பெ.கலியமூர்த்தி, நெ.6 சி, என்.எம்.எஸ்.காலனி, பூம்புகார் ரோடு, சேந்தங்குடி, சேந்தங்குடி அஞ்சல், நாகப்பட்டினம் மாவட்டம் தற்போது மயிலாடுதுறை மாவட்டம்.<br><br>3. கிளை மேலாளர், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி, |

SUDHA P

Digitally signed by SUDHA P
Date: 2026.03.16 19:03:16 +0530

| | | |
|---|---|---|
| | | நெ. 2 ரோடு, தாஜ் டவர்,<br>மயிலாடுதுறை டவுன் மற்றும் தாலுக்கா. |
| 3. | Date of Filing of the Claim Petition<br>(மனுதாக்கல் செய்யப்பட்டநாள்) | 08.07.2019 |
| 4. | Date of Award<br>(உத்தரவு பகரப்பட்ட நாள்) | 16.03.2026 |
| 5. | Amount of Award<br>(வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை) | **ரூ.6,37,477/- (ரூபாய்.ஆறு லட்சத்து முப்பத்து ஏழாயிரத்து நானூற்று எழுபத்து ஏழு மட்டும்)** |
| 6. | Interest Rate Applicable | 7.5% |
| 7. | Date from which interest is payable<br>(எந்த நாளிலிருந்து வட்டி வழங்கப்படவேண்டும்) | மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை (மனுதாரரின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்ட காலத்தை தவிர்த்து) வட்டி வழங்க உத்தரவிடப் படுகிறது (Dismissed for default period நீங்கலாக) |
| 8. | Costs if any | 1, 3 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு செலவுத் தொகையான ரூ.28,289.50/- **முழுமையாக்கப்பட்ட தொகை ரூ.28,289/- யை** கொடுக்க வேண்டும் என்று உத்திரவிடப் படுகிறது.<br><br>1, 3 எதிர்மனுதாரர்களுக்கு இம்மனுவில் ஏற்பட்ட செலவுத்தொகை **ரூ.12,210/-ஐ** அவர்களே ஏற்கவேண்டும்.<br><br>***(Stamp Duty of* Rs.5747.27 (-) 375= Rs.5372.27 @ Rs.5372/-the *Petitioner shall pay the balance Court Fee of Rs.5372/-) within 10 days.*** |

**Particulars of costs**

| **For Petitioner** | | **For Respondent** |
|---|---|---|
| | **Rs.** | **Rs.** |
| Court fee<br>Rs.5747.27 (-)<br>375= Rs.5372.27<br>@ Rs.5372/- | 5747.00 | -- |

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.03.16 19:03:23 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | Stamp in Vakalath | 10.00 | 10.00 |
| | | Fee for services of process | 32.50 | -- |
| | | Stamp on Exhibits | 50.00 | -- |
| | | Typing charge | 200.00 | 200.00 |
| | | Advocate fee | 22,250.00 | 12,000.00 |
| | | **Total** | **28,289.50** | **12,210.00** |
| 9. | The Mode and manner of deposit of Compensation<br>(இழப்பீட்டுத் தொகையை வைப்பீடு செய்யப்படும் வழிமுறை) | <u>**முடிவாக, இம்மனு கீழ்கண்டவாறு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.**</u><br><br>i) ***முதல் எதிர்மனுதாரரான தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழகமும், 3 ஆம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனமும் சேர்ந்து மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீட்டு தொகையான*** **ரூ.6,37,477/- ல் (ரூபாய்.ஆறு லட்சத்து முப்பத்து ஏழாயிரத்து நானூற்று எழுபத்து ஏழு மட்டும்)** ***தலா ரூ.3,18,738.50/- யை கொடுக்க வேண்டும்மென்று உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகையில் 1 முதல் 3 மனுதாரர்களுக்கு தலா ரூ.1,27,495/-வீதமும், திருமணம் ஆகாத 4 ஆம் மனுதாரருக்கு ரூ.2,54,992/-ம் கிடைக்கத்தக்கது என்று உத்தரவிடப்படுகிறது.***<br><br>ii) மேற்படி இழப்பீட்டு தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை மனுதாரர்களின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் காலம் தவிர 7.5 % சதவிகிதம் ஆண்டு வட்டி சேர்த்து இந்த உத்தரவு தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>iii) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 1 மற்றும் 3 ஆம் எதிர்மனுதாரர்கள் மயிலாடுதுறை பாரத மாநில வங்கி கிளையில் உள்ள இந்த மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய கணக்கு | | |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:03:30 +0530

| | | |
|---|---|---|
| | | எண்.4280964666–ல் செலுத்த வேண்டும் என்றும், செலுத்திய விபரத்தை இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்/ உரிமைகோருபவர் மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயத்திலிருந்து NEFT or RTGS மூலம் வட்டியுடன் சேர்ந்த அவர்களது முழு இழப்பீட்டுத் தொகையை வங்கியில் திரும்பப்பெற அனுமதிக்கப்படுகிறார்கள்.<br><br>v) பாக்கி நீதிமன்றக் கட்டணமான ரூ.5372/–யை 1 முதல் 4 மனுதாரர்கள் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.<br><br>வழக்குரைஞர் கட்டணம் ரூ.22,250/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. |
| 10. | The Mode and manner of Disbursement<br>(மேற்படி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் வழிமுறை) | Through *NEFT / RTGS* |
| 11. | Date of payable Balance Court Fee<br>(பாக்கி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டிய நாள்) | பாக்கி நீதிமன்றக் கட்டணத்தை மனுதாரர்கள் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது. |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:03:36 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

**1. மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :–**

ம.சா.1 – திருமதி. காயத்திரி (இறந்துபோனவரின் மகள்)

ம.சா.2 – திரு. செல்வநாதன்

ம.சா.3 – மருத்துவர் –சீனிவாசன் பீம்ஸ் மருத்துவமனை மருத்துவர்

**2. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

ம.சா.ஆ 1 – 22.04.2019 முதல் தகவலறிக்கை நகல்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:03:52 +0530

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.2 – | 31.03.2015 | 2 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று நகல் |
| ம.சா.ஆ.3 – | 11.04.2019 | காப்பீட்டு சான்று நகல் |
| ம.சா.ஆ.4 – | 28.09.1999 | 2 ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ.5 – | -- | மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தகம் நகல் |
| | -- | மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| ம.சா.ஆ.6 – | 26.04.2019 | பீம்ஸ் மருத்துவமனையின் டிஸ்சார்ஜ் சம்மரி |
| ம.சா.ஆ.7 – | 2019 –2020 | மருத்துவ பில்கள் |
| ம.சா.ஆ.8 – | 22.04.2019 | அண்ணாமலை மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையின் டிஸ்சார்ஜ் சம்மரி |
| ம.சா.ஆ.9 – | 2019 –2020 | மருத்துவ குறிப்பு |
| ம.சா.ஆ.10 – | 23.06.2020 | சி.டி.ஸ்கேன். |
| ம.சா.ஆ.11 – | 09.11.2020 | இறப்பு சான்று நகல் |
| ம.சா.ஆ.12 – | 12.12.2020 | வாரிசு சான்று நகல் |

**3. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :–**

எ.ம.சா.1 சந்தியா 3 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் கிளை மேலாளர்.

**4. எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :–** இல்லை.

**5. நீதிமன்ற சான்றாவணங்கள் :–**

நீ.ம.சா.ஆ.1 11.11.2019 ஊனச்சான்று 10 சதவீகிதம்.

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.03.16 19:04:14 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

Draft/ Fair Order
MCop No.265/2019
16.03.2026.